**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் நாள் - வெள்ளிக்கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி 19-ம் நாள்

**கு.ப.ம.எண்.558/2026**

1. மதி, வயது 38/2026, த/பெ சிங்காரவேல்
2. மோகன், வயது 41/2026, த/பெ சேகர்
3. நிலவரசன், வயது 35/2026, த/பெ தம்பிராஜ் ..... மனுதாரர்கள்/ எதிரிகள்

-எதிர்-

காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல்நிலையம்,
குற்ற எண் 140/2026 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (03.07.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் திரு. எம். தினேஷ்குமார் மற்றும் எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வ பதிலுரை ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**//உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண். 140/2026-ல் சட்டப்பிரிவு 103(1) BNSன் கீழான குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்களால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரர் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 18.05.2026 அன்று கைது செய்யப்பட்டு 47 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார் என்றும், இது இரண்டாவது பிணை மனு என்றும், மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வ பதிலுரையில் இவ்வழக்கில் இறந்துபோன அருண் என்பவரும் மேற்படி எதிரிகளும் நண்பர்கள் ஆவார்கள். கடந்த 14.05.2026ம் தேதி மாலை 06.00 மணியளவில் அருண் எதிரிகளிடம் சரக்கு வாங்கி கொடு எனக் கேட்டதால் ஆத்திரமடைந்த அருண் காமக்குரோதமான வார்த்தைகளால் திட்டியதால், எதிரிகள் அவரின் கன்னத்தில் அறைந்தும், வேப்பமரக்கட்டை மற்றும் கருவகட்டையை உடைத்து வந்து அருணை அடித்ததில் அருண் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், எனவே எதிரிகளை பிணையில்விட்டால் வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்றும்,

இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்று கூறி எதிரிகளை பிணையில்விட கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் மீது சட்டப்பிரிவு 103(1) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு கொலை வழக்காகும். இவ்வழக்கில் இறந்துபோன அருண் என்பவரும் மேற்படி எதிரிகளும் நண்பர்கள் ஆவார்கள். கடந்த 14.05.2026ம் தேதி மாலை 06.00 மணியளவில் அருண் எதிரிகளிடம் சரக்கு வாங்கி கொடு எனக் கேட்டதால் ஆத்திரமடைந்த அருண் காமக்குரோதமான வார்த்தைகளால் திட்டியதால், எதிரிகள் அவரின் கன்னத்தில் அறைந்தும், வேப்பமரக்கட்டை மற்றும் கருவகட்டையை உடைத்து வந்து அருணை அடித்ததில் அருண் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி வழக்கில் 18.05.2026 அன்று மனுதாரர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் உள்ளார். மனுதாரர்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில் 4வது எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு கு.ப.ம.எண்.16425/2026, நாள் 01.07.2026ன் படி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதை தெரிவித்தார். மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கினால், அவர் சாட்சிகளை மிரட்டவோ அல்லது திசைத்திருப்பவோ அல்லது மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது. வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. எனவே குற்றத்தின் சூழ்நிலைகள் மற்றும் தீவிரத்தன்மையை (Gravity of the offense) கருத்தில்கொண்டு, இந்த மனுவை நீதிமன்றம் **தள்ளுபடி** செய்து உத்தரவிடுகிறது.

முடிவில் இம்மனு **தள்ளுபடி** செய்யப்படுகிறது.

இன்று (03.07.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G M VASANTHI

Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.03 17:40:39 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. நீதித்துறை நடுவர் எண்.1, நாகப்பட்டினம்
2. திரு. எம். தினேஷ்குமார், வழக்கறிஞர், நாகப்பட்டினம்.